மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. க. இராமமூர்த்தி அவர்களும் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி நான் நாளை மறுநாள் எடுத்துக்கொள்ள இருக்கிறேன். என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் சிலர் உட்கார்ந்துகொண்டே ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருந்தார்கள்.)

3. 1968-69-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம், மூன்றாம் நாள், மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. எஸ். கோவிந்தராஜன் அவர்கள் பேசுவார்கள்.

திரு. வி. எஸ். கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே .. .. ..

4. அவையுரிமைக் கேள்வி.

திரு. கே. விநாயகம் மீது.

திரு. க. இராமமூர்த்தி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார், சபை நடவடிக்கை நடந்துகொண்டிருக்கும்போது தனியாக வாதங்கள் இங்கே நடந்துகொண்டிருக்கிறது. இது முறையா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எதற்கு வேண்டுமானாலும் எழுந்து, எழுப்புவது உறுப்பினர்களுக்கு வழக்கமாக இருக்கிறது. இனி, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லாததற்கும் "பாயிண்ட் ஆப் ஆர்டர்" என்று சொல்லி, எழுந்து, எழுப்பினால், இங்கே உட்கார்ந்திருக்கும் பேரவைத் தலைவரோ, துணைத் தலைவரோ, அப்படிப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது என்பது பற்றி யோசிக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

Thiru K. VINAYAKAM : (said sitting) That is our privil ge. You have no right to punish us. What are you talking ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைச் சபாநாயகருக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்று கூறக்கூடிய அளவுக்கு வந்திருக்கும் காரணத்தால், இதுபற்றி இங்கே மேலும் விவாதம் ஏதுமின்றி, நானே அதை அவையுரிமைக் குழுவுக்கு அனுப்புவது என்று தீர்மானித்திருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Dr. H. V. HANDE : Is there any instance in any part of India in any legislature when a Speaker or Deputy Speaker has taken action because a point of order raised is not a point of order? If such a actio i is tak n we will react more. It will be injurious to democracy. லோக் சபாவைப் பாருங்கள். எல்லா சட்டசபைகளையும் பாருங்கள். Why do you take such a serious step ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள், இந்தியாவிலே இருக்கும் எல்லா மாநிலங்களிலும் உள்ள உரிமைகள் இங்கே வரவேண்டும் என்கிறார்களா என்று தெரியவில்லை. தயவுசெய்து, நம்முடைய தமிழ்நாட்டுச் சட்ட மன்றம் கட்டிக்காத்துவரும் நல்ல பண்புகளை, வேறு மாநிலங்களையெல்லாம் உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டு, கெடுத்துவிடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். எந்த எந்த மாநிலங்களிலோ என்ன என்னவோ நடைபெறுகின்றன. அவையெல்லாம் இங்கே நடைபெறவேண்டாம். துணைச் சபாநாயகர் தீர்ப்புக் கூறியபின், அவர்களுக்குப் பேச வாய்ப்பு இல்லை என்று, உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டே ஒருவருக்கொருவர்